05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# KONSEP JIWA DALAM LAGU–LAGU SUCI THIRUNAVUKKARASAR

POONGKODI A/P MURUGAYA

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

TESIS INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT UNTUK PEROLEH IJAZAH SARJANA SASTERA TAMIL (KESUSASTERAAN TAMIL) MOD PENYELIDIKAN

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## INSTITUT PENGAJIAN SISWAZAH / *INSTITUTE OF GRADUATE STUDIES*

## BORANG PENGESAHAN PENYERAHAN TESIS/DISERTASI/LAPORAN KERTAS PROJEK
## *DECLARATION OF THESIS/DISSERTATION/PROJECT PAPER FORM*

Tajuk / *Title*: : KONSEP JIWA DALAM LAGU-LAGU SUCI THIRUNAVUKKARASAR

No. Matrik /*Matric No.*: : M20142002465

Saya / *I* : : POONGKODI A/P MURUGAYA

(Nama pelajar / *Student's Name*)

mengaku membenarkan Tesis/Disertasi/Laporan Kertas Projek (Kedoktoran/Sarjana)* ini disimpan di Universiti Pendidikan Sultan Idris (Perpustakaan Tuanku Bainun) dengan syarat-syarat kegunaan seperti berikut:-
*acknowledged that Universiti Pendidikan Sultan Idris (Tuanku Bainun Library) reserves the right as follows:-*

1. Tesis/Disertasi/Laporan Kertas Projek ini adalah hak milik UPSI.
   *The thesis is the property of Universiti Pendidikan Sultan Idris*
2. Perpustakaan Tuanku Bainun dibenarkan membuat salinan untuk tujuan rujukan dan penyelidikan.
   *Tuanku Bainun Library has the right to make copies for the purpose of reference and research.*
3. Perpustakaan dibenarkan membuat salinan Tesis/Disertasi ini sebagai bahan pertukaran antara Institusi Pengajian Tinggi.
   *The Library has the right to make copies of the thesis for academic exchange.*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4. Sila tandakan ( √ ) bagi pilihan kategori di bawah / *Please tick ( √ ) from the categories below:-*

| | | |
|---|---|---|
| ☐ | **SULIT/*CONFIDENTIAL*** | Mengandungi maklumat yang berdarjah keselamatan atau kepentingan Malaysia seperti yang termaktub dalam Akta Rahsia Rasmi 1972. / *Contains confidential information under the Official Secret Act 1972* |
| ☐ | **TERHAD/*RESTRICTED*** | Mengandungi maklumat terhad yang telah ditentukan oleh organisasi/badan di mana penyelidikan ini dijalankan. / *Contains restricted information as specified by the organization where research was done.* |
| ☑ | **TIDAK TERHAD / *OPEN ACCESS*** | |

(Tandatangan Pelajar/ Signature)

Tarikh: 13/05/2019

(Tandatangan Penyelia / *Signature of Supervisor*) & (Nama & Cop Rasmi / *Name & Official Stamp*)

DR. ILANGKUMARAN SIVANADHAN
Senior Lecturer
Department of Modern Languages
Faculty of Languages and Communication
Sultan Idris Education University

Catatan: Jika Tesis/Disertasi ini **SULIT @ TERHAD**, sila lampirkan surat daripada pihak berkuasa/organisasi berkenaan dengan menyatakan sekali sebab dan tempoh laporan ini perlu dikelaskan sebagai **SULIT** dan **TERHAD**.

*Notes: If the thesis is CONFIDENTAL or RESTRICTED, please attach with the letter from the related authority/organization mentioning the period of confidentiality and reasons for the said confidentiality or restriction.*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# நன்றியுரை

இவ்வாய்வினைத் தங்கு தடையின்றி சிறப்புடன் உருவாக்க எனக்கு அருள் புரிந்த எல்லாம் வல்ல இறைவனடியைப் பணிந்து வணங்குகிறேன். இவ்வாய்வினை மேற்கொள்ள அனுமதியளித்த சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு எனது மனமார்ந்த நன்றி.

இவ்வாய்வுச் சிறந்த முறையில் ஆக்கம் பெறவும்; திட்டமிட்டப்படி செய்து முடிக்கவும்; வழிக்காட்டிய விரிவுரையாளரும் நெறியாளருமான முனைவர். கிங்ஸ்டன் பால் தம்புராஜ் மற்றும் முனைவர். இளங்குமரன் அவர்களுக்கு என் நன்றியைத் தாழ்மையுடன் கூறிக்கொள்கிறேன்.

நான் துவண்டு விழும் பொழுது என் மனதிற்கு தைரியத்தையும் மனவலிமையையும் ஊட்டிய என் பெற்றோர் திரு,திருமதி முருகையா இராஜேஸ்வரி, கணவர் திரு.ஜீவா நாதன், சகோதரி புவனசுந்தரி, சகோதரர்கள் முனிவேல், டேவராஜன் அவர்களுக்கும் எனது நன்றி நவில்கிறேன்.

இவ்வாய்வு சிறக்க பல உதவிகளையும் ஆலோசனைகளையும் அளித்த முனைவர். வீரலெஷ்சுமி, முனைவர். பிராங்கிளின் அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறுதியாக, இவ்வாய்வுப் பணி சிறக்க உதவிய அனைத்துத் தரப்பினருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# KONSEP JIWA DALAM LAGU-LAGU SUCI THIRUNAVUKKARASAR

## ABSTRAK

Kajian ini bertujuan mengenal pasti dan mengklasifikasi konsep jiwa yang terdapat dalam lagu-lagu suci *Thirunavukkarasar*. Kajian ini juga menganalisis hubungan antara lagu-lagu suci *Thirunavukkarasar* dengan konsep jiwa. Kajian ini adalah kajian kualitatif dan data kajian ini telah dikumpulkan melalui cara menganalisis dokumen. Konsep jiwa yang dinyatakan dalam *Thiruvarudpayan* digunakan dalam kajian ini. Dapatan kajian menunjukkan bahawa kebanyakan lagu-lagu suci *Thirunavukkarasar* mengandungi 10 konsep jiwa yang dinyatakan dalam *Tiruvarudpayan*. Dapatan kajian juga membuktikan bahawa terdapat hubungan antara lagu-lagu suci *Thirunavukkarasar* dengan konsep jiwa. Kesimpulan daripada kajian ini menunjukkan kebanyakan lagu-lagu suci *Thirunavukkarasar* mengandungi konsep jiwa. Implikasi konsep jiwa diterapkan secara mendalam bagi penganut agama Hindu melalui lagu-lagu suci *Thirunavukkarasar*. Kajian ini membantu penganut agama Hindu untuk memahami kebenaran jiwa dan mengertikan kewujudan jiwa di bawah naungan Tuhan.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## CONCEPT OF SOUL IN THIRUNAVUKKARASAR SONGS

## ABSTRACT

This study aimed to identify and classify the concept of soul in *Thirunavukkarasar's* songs. The study also analyzes the relationship between *Thirunavukkarasar's* songs and concept of soul. This study is based on qualitative analysis and data for this study was collected through document analyze method. The concept of soul put forward in the *Thiruvarudpayan* was used for this study. The findings showed that 10 elements of soul concept detectable in *Thirunavukkarasar's* songs. The result also showed that there is a relationship between *Thirunavukkarasar's* songs and soul concepts. As conclusion many songs of *Thirunavukkarasar* contain soul concept. The implication of this study will result in a deeper realization of religious elements among the Hindu devotees. This research helps the Hindu devotees to understand the reality of the soul within the realm of God.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# திருநாவுக்கரசர் தேவாரத்தில் உயிர்க்கொள்கை

## ஆய்வுச் சாரம்

இவ்வாய்வு திருநாவுக்கரசர் தேவாரத்தில் உயிர்க்கொள்கையைக் கண்டறிதலும், வகைப்படுத்துதலும் திருநாவுக்கரசர் தேவாரத்திற்கும் உயிர்க்கொள்கைக்கும் இடையே உள்ள தொடர்பை ஆராய்தலும் போன்ற நோக்கங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு கள ஆய்வு ஆகும். இவ்வாய்விற்கான தகவல்கள் யாவும் விளக்கியல் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன. திருவருட்பயனின் உயிர்க்கொள்கை இவ்வாய்வின் கோட்பாடாகக் பயன்படுத்தப்பட்டுள்ளது. திருவருட்பயனில் உயிர்க்கொள்கையின் கீழ்க்கூறப்பட்டுள்ள 10 உயிரின் கூறுகள் திருநாவுக்கரசர் தேவாரத்தில் கண்டறியப்பட்டன. மேலும், திருநாவுக்கரசர் தேவாரத்திற்கும் உயிர்க்கொள்கைக்கும் தொடர்புள்ளது என்பது இவ்வாய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் முடிவில், திருநாவுக்கரசர் தேவாரத்தில் உயிர்க்கொள்கைகள் இடம்பெற்றுள்ளன என்பது உறுதிசெய்யபட்டது. இவ்வாய்வின் வழி, இந்துகள் உயிர் பற்றிய சிந்தனைகளை ஆழமாக அறிந்து கொள்ள இயலும். மேலும், இவ்வாய்வு, திருநாவுக்கரசர் தேவாரத்திற்கும் உயிர்க்கொள்கைக்கும் இடையே உள்ள தொடர்பினை இந்துகள் அறிந்து கொள்ள வழிவகுக்கும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## பொருளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| ஆய்வாளர் உறுதிமொழி | | ii |
| நன்றியுரை | | iii |
| ஆய்வுச் சாரம் | | iv |
| பொருளடக்கம் | | v |
| வரைபடப் பட்டியல் | | ix |
| **இயல் 1** | **அறிமுகம்** | |
| 1.1 | முன்னுரை | 1 |
| 1.2 | ஆய்வுப்பின்னணி | 2 |
| 1.3 | ஆய்வின் சிக்கல் | 8 |
| 1.4 | ஆய்வின் முக்கியத்துவம் | 10 |
| 1.5 | ஆய்வு நோக்கம் | 11 |
| 1.6 | ஆய்வு வினா | 12 |
| 1.7 | ஆய்வின் எல்லை | 12 |
| 1.8 | ஆய்வு ஆதாரங்கள் | 13 |
| 1.8.1 | முதன்மை ஆதாரம் | 13 |
| 1.8.2 | துணைமை ஆதாரம் | 13 |
| 1.9 | முக்கிய கலைச்சொற்களின் விளக்கம் | 13 |
| 1.9.1 | திருநாவுக்கரசர் தேவாரம் | 13 |
| 1.9.2 | உயிர்க்கொள்கை | 15 |
| 1.10 | முடிவுரை | 16 |
| **இயல் 2** | **முந்தைய ஆய்வுகள்** | |
| 2.1 | முன்னுரை | 17 |
| 2.2 | தேவாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள் | 17 |
| 2.3 | உயிர்க்கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள் | 25 |
| 2.4 | ஆய்வுக் கட்டுரைகள் | 29 |
| 2.5 | முந்தைய ஆய்வின் பயன்பாடு | 31 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


| | | |
|---|---|---|
| 2.6 | முடிவுரை | 32 |
| **இயல் 3** | **ஆய்வு நெறிமுறை** | |
| 3.1 | முன்னுரை | 33 |
| 3.2 | ஆய்வு வடிவமைப்பு | 33 |
| 3.3 | ஆய்வு அணுகுமுறை | 36 |
| 3.4 | ஆய்வுக் கட்டமைப்பு | 37 |
| 3.5 | தரவு சேகரிக்கும் முறை | 38 |
| 3.6 | தரவுப் பகுப்பாய்வு முறை | 38 |
| 3.7 | ஆய்வுக் கோட்பாடு | 38 |
| 3.7.1 | உயிர்களின் தொகை | 40 |
| 3.7.2 | உயிர்கள் மூவகையினர் | 41 |
| 3.7.3 | மாயையுள் அகப்பட்டு மயங்குவோர் | 41 |
| 3.7.4 | உயிருக்குத் தன்வயமான செயலில்லை | 42 |
| 3.7.5 | உயிருக்குச் சித்து என்ற பெயர் பொருந்துமோ? | 43 |
| 3.7.6 | உயிர் அறியுந்தன்மை உடையதே | 43 |
| 3.7.7 | உயிர் சதசத்தாய் நிற்பது | 44 |
| 3.7.8 | சார்ந்ததன் வண்ணமாதல் | 44 |
| 3.7.9 | ஆன்ம அறிவுக்குக் கூகையின் கண் உவமை | 45 |
| 3.7.10 | இவ்வுயிர் திருவருளை உணர்வது எந்நாளோ? | 45 |
| 3.8 | கோட்பாட்டு வடிவமைப்பு | 46 |
| 3.9 | ஆய்வு நடைமுறை | 47 |
| 3.10 | முடிவுரை | 48 |
| **இயல் 4** | **தரவுப் பகுப்பாய்வு** | |
| 4.1 | முன்னுரை | 49 |
| 4.2 | உயிர்களின் தொகை | 50 |
| 4.2.1 | உயிர்களின் எண்ணிக்கை | 51 |
| 4.2.2 | உயிர்களுக்குப் பிறப்பும் இறப்பும் | 52 |
| 4.2.3 | உயிர்கள் மாறிப்பிறத்தல் | 54 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

| | | |
|---|---|---|
| 4.2.4 | உயிர்கள் பிறவி எடுத்தல் | 56 |
| 4.3 | உயிர்கள் மூவகையினர் | 61 |
| 4.3.1 | சகலர் | 62 |
| 4.3.2 | பிரளயாகலர் | 66 |
| 4.3.3 | விஞ்ஞானகலர் | 69 |
| 4.4 | மாயையுள் அகப்பட்டு மயங்குவோர் | 71 |
| 4.5 | உயிருக்குத் தன்வயமான செயலில்லை | 77 |
| 4.6 | உயிருக்குச் சித்து என்ற பெயர் பொருந்துமோ ? | 82 |
| 4.6.1 | உயிர்களிடத்தில் அறியாமை | 84 |
| 4.6.2 | இறைவனே சித்து பொருள் | 89 |
| 4.7 | உயிர் அறியுந்தன்மை உடையதே | 93 |
| 4.8 | உயிர் சதசத்தாய் நிற்பது | 105 |
| 4.8.1 | உயிர் சத்தோடு கூடி நிற்கும் போது சத்தாகிய சிவத்தின் தன்மை பெற்றல் | 106 |
| 4.8.2 | உயிர் அசத்தோடு கூடி நிற்கும் போது அசத்தின் தன்மை பெற்றல் | 111 |
| 4.9 | சார்ந்ததன் வண்ணமாதல் | 121 |
| 4.10 | ஆன்ம அறிவுக்குக் கூகையின் கன் உவமை | 129 |
| 4.11 | இவ்வுயிர் திருவருளை உணர்வது எந்நாளோ ? | 131 |
| 4.12 | முடிவுரை | 136 |
| **இயல் 5** | **தொகுப்புரையும் கருத்துரையும்** | |
| 5.1 | முன்னுரை | 137 |
| 5.2 | ஆய்வின் சுருக்கம் | 137 |
| 5.3 | ஆய்வின் கண்டுபிடிப்புகள் | 139 |
| 5.3.1 | திருநாவுக்கரசர் பாடல்களில் உயிர்களின் தொகை என்ற கொள்கை முன் வைக்கப்பட்டுள்ளது | 139 |
| 5.3.2 | திருநாவுக்கரசர் பாடல்களில் உயிர்கள் மூவகையினர் என்ற கொள்கை முன் வைக்கப்பட்டுள்ளது. | 140 |
| 5.3.3 | திருநாவுக்கரசர் பாடல்களில் உயிர்கள் மாயையுள் அகப்பட்டு மயங்குவோர் என்ற கொள்கை முன் வைக்கப்பட்டுள்ளது. | 141 |
| 5.3.4 | திருநாவுக்கரசர் பாடல்களில் உயிருக்குத் தன்வயமான செயலில்லை என்ற கொள்கை முன் வைக்கப்பட்டுள்ளது. | 142 |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


| | | |
|---|---|---|
| 5.3.5 | திருநாவுக்கரசர் பாடல்களில் உயிருக்குச் சித்து என பெயர் பொருந்தாது என்ற கொள்கை முன் வைக்கப்பட்டுள்ளது. | 142 |
| 5.3.6 | திருநாவுக்கரசர் பாடல்களில் உயிர் அறியுந்தன்மை உடையதே என்ற கொள்கை முன் வைக்கப்பட்டுள்ளது. | 144 |
| 5.3.7 | திருநாவுக்கரசர் பாடல்களில் உயிர் சதசத்தாய் நிற்பது என்ற கொள்கை முன் வைக்கப்பட்டுள்ளது. | 145 |
| 5.3.8 | திருநாவுக்கரசர் பாடல்களில் உயிர் சார்ந்ததன் வண்ணமாதல் என்ற கொள்கை முன் வைக்கப்பட்டுள்ளது. | 146 |
| 5.3.9 | திருநாவுக்கரசர் பாடல்களில் ஆன்ம அறிவுக்குக் கூகையின் கண் உவமை என்ற கொள்கை முன் வைக்கப்பட்டுள்ளது. | 147 |
| 5.3.10 | திருநாவுக்கரசர் பாடல்களில் உயிர்கள் மலபரிபாகத்தின் வாயிலாக இறைவனின் திருவருளைப் பெறும் என்ற கொள்கை முன் வைக்கப்பட்டுள்ளது. | 147 |
| 5.4 | ஆய்வின் முடிவு | 148 |
| 5.5 | தொடர் ஆய்விற்கான பரிந்துரைகள் | 149 |
| 5.6 | முடிவுரை | 151 |
| **மேற்கோள்நூல்கள்** | | 152 |
| **பின்னிணைப்பு** | | |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## வரைபட பட்டியல்



| என் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 3.1 | ஆய்வு வடிவமைப்பு | 35 |
| 3.2 | ஆய்வுக் கட்டமைப்பு | 37 |
| 3.3 | ஆய்வுக் கோட்பாட்டுக் கட்டமைப்பு | 46 |
| 3.4 | ஆய்வு நடைமுறை | 47 |



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

## அறிமுகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.1 முன்னுரை

'அறிமுகம்' என்கிற இவ்வியலானது, ஆய்வில் மேற்கொள்ளவிருக்கும் தலைப்பை விவரிக்கும் பகுதியாக அமைகின்றது. இவ்வியலில், ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு முக்கியத்துவம், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு எல்லை, ஆய்வு ஆதாரங்கள், முக்கியக் கலைச்சொற்கள் விளக்கம் போன்றவை விளக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.2 ஆய்வுப் பின்னணி

"உலகில் தோன்றிய சமயங்களெல்லாம் மக்களிடம் தோன்றும் குறைகளைக் களைந்து, வாழ்க்கை முறைகளை நெறிப்படுத்தும் நோக்கங்கொண்டவை ஆகும். இவற்றில் மிகவும் தொன்மை வாய்ந்த சமயமாகக் கருதப்படுவது சைவ சமயம்" (ஆறுமுகநாவலரவர்கள், 1986, ப. 4). இதனையே, சங்கர் அவர்கள் தமது ஆய்வில் "தமிழகத்தின் மிகத் தொன்மையான சமயம் சைவ சமயமேயாகும்" என்கிறார். (குமரேசமூர்த்தி,சோ, 2002, ப. 265).

சிவபிரானை முழு முதற்கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவம் எனப்படும். சைவ சமய புனித நூல்களின் இரு பெரு பிரிவுகளாக விளங்குவன தோத்திரங்களும் சாத்திரங்களும் ஆகும். இவை இரண்டுமாக இறைவன் இருக்கிறான் சைவ சமயம் கூறுகின்றது. இதனையே, திருநாவுக்கரசர் தமது தேவாரத்தில்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

"தோத்திரமும் சாத்திரமும் ஆனாய் தாமே"

(6-778)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

வீ.சிவஞானம் (2015) அவர்கள், தமது திருநாவுக்கரசரின் பாடல்கள் விளக்க நூல் ஆய்வில்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

> 'மெய்யறிவு' முதிர்ந்த நிலையில் மெய்யன்பில் விளைவது 'தோத்திரம்' என்றும் 'மெய்யன்பு' முதிர்ந்த நிலையில் மெய்யறிவில் விளைவது 'சாத்திரம்' என்று கூறப்படுகிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலியோரது மெய்யறவில் விளைந்தனவே தோத்திரங்கள். மெய்கண்டார், அருள் நந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் முதலியோரது மெய்யன்பில் விளைந்தனவே சாத்திரங்கள் என்றும் 'தோத்திரம்' என்பது பெருமான் உயிர்களுக்குச் செய்தருளிய செயல்களை எல்லாம் புகழ்ந்துரைப்பது. சாத்திரம் என்பது பெருமான், அன்பராயினும் வன்பராயினும் நடுநிலை நின்று அவரவர்க்கு உள்ளபடி அவரவரைக் கொண்டு செலுத்தும் திறம் பாடுவது ஆகும். 'தோத்திரம்' என்பது இலக்கியம் போன்றது. 'சாத்திரம்' என்பது இலக்கணம் போன்றது." என்கிறார் (ப:3).

இதனையே அ.தேவசேனாபதி (1963) அவர்கள் தமது ஆய்வுநூலில்,

> "சாத்திரங்கள் சைவ சமயத்திற்கு இலக்கணமாகவும் சைவசமய அருட்பாடல்கள் அடியவர்களின் வாழ்க்கைச் செய்திகள் ஆகியன இலக்கியமாகவும் அமைகின்றன" என்கிறார் (ப:2).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சைவ சித்தாந்த சாத்திரங்கள் நெறியின் மெய்ப்பொருளியல் கொள்கைகளை விளக்குகின்ற சாத்திர நூல்கள் பதினான்கு ஆகும். இவை 'மெய்கண்டசாத்திரங்கள்" எனப் பெயர் பெறும் (சந்திரசேகரன்.நா, 2002, ப:31). சைவசித்தாந்தத்தில் முடிந்த முடிபாகக் கொள்ளப்படும் பொருள்கள் பதி, பசு, பாசம் என்பவனவாகும் (சுப்புரெட்டியார்.ந, 2010, ப: 37). சாத்திரங்களில் தலையாயது மெய்கண்ட சாத்திரங்கள் ஆகும் (சிவஞானம்,வீ, 2015, ப: 3). தத்துவ நூல்களே சாத்திரங்கள் எனப் பெயர் பெறும். சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கையும் வரிசைப்படுத்தும் வெண்பா,

> "உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
> பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்தவருட்
> பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
> உண்மைநெறி சங்கற்ப முற்று"

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவ்வெண்பா பதினான்கு சாத்திரங்களையும் குறிப்பிடுகின்றது. அவை,

1. திருவருட்பயன் - உமாபதி சிவாச்சாரியார்
2. உண்மை விளக்கம் - திருவதிகை மனவாசங் கடந்தார்
3. சிவப்பிரகாசம் - உமாபதி சிவாச்சாரியார்
4. சிவஞானசித்தியார் - அருணந்தி சிவாச்சாரியார்
5. சிவஞானபோதம் - மெய்கண்ட தேவர்
6. திருவுந்தியார் - திருவியலூர் உய்யவந்த தேவனார்
7. திருக்களிற்றுப்படி பாடியார் - தென்கடலூர் உய்ய வந்த தேவனார்
8. இருபா இருபஃது - அருணந்தி சிவாச்சாரியார்
9. வினா வெண்பா - உமாபதி சிவாச்சாரியார்
10. போற்றிப் பஃறோடை - உமாபதி சிவாச்சாரியார்
11. கொடிக்கவி - உமாபதி சிவாச்சாரியார்
12. நெஞ்சுவிடு தூது - உமாபதி சிவாச்சாரியார்
13. உண்மைநெறி விளக்கம் - உமாபதி சிவாச்சாரியார்
14. சங்கற்ப நிராகரணம் - உமாபதி சிவாச்சாரியார்

போன்றவை ஆகும் (சந்திரசேகரன்.நா, 2002, ப:31-32).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சைவ சித்தாந்த வரலாறு நூலில், தோத்திர வடிவிலமைந்த சைவத் திருமுறைகளாகிய செந்தமிழிலக்கியங்களிலிருந்து சைவசித்தாந்தச் சாத்திரமாகிய இலக்கண நூல்களை உருவாக்கிக் கொடுத்தவர்கள் திருவியலூர் உய்யவந்த தேவநாயனார், திருக்கடலூர் உய்யவந்த தேவநாயனார், மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், திருவதிகை மனவாசகங்கடந்தார், உமாபதி சிவாசாரியார் ஆகிய திருவருட் சான்றோராவர் என்கிறார். சைவசிந்தாந்த நூல்களை இயற்றியருளிய சான்றோர்களுள் மெய்யுணர்வுபதேச பரம்பரையைத் தோற்றுவித்து வளர்த்த மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாசாரியார் ஆகிய நால்வரையும் சைவசமய சந்தானகுரவர் நால்வர் எனப் போற்றுவது சைவமரபாகும் (வெள்ளைவாரணர். க, ப:3).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சைவ சமயம் தோத்திரங்களாகத் தமிழில் விளங்குவன திருமுறைகளாகும் (ஞானப்பூங்கோதை. மோ, ப:9) சைவ சமயம் செழித்து வளர்ந்ததோங்கியிருந்த காலம், பன்னிருதிருமுறை ஆசிரியர்கள் காலமாகிய கி.பி. 5ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு ஆகும் (வெள்ளைவாரணர். க, ப:3).

“கி.பி. ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் சைவ சமயப் பெரியவர்களான நாயன்மார்களும் வைணவ சமயப் பெரியவர்களான ஆழ்வார்களும் தோன்றிப் பக்திப் பாடல்கள் பாடி ஊர் ஊராகச் சென்று தம் சமயங்களைப் பரப்பி வந்தார்கள்” (வரதராசன்.மு, 2009, ப: 110). நாயன்மார்கள் சிவப்பெருமானின் அடியார்கள் ஆவர். “நாயன்மார்கள் திருநீற்றின் பெருமையையும் திருவைந்தெழுத்தின் வல்லமையையும் வலியுறுத்தி மக்களைச் சைவசமயத்தில் ஈடுபடச் செய்து இறையருள் பெறச் செய்தனர். அவர்கள் இயற்றிய

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தெய்வ மணங்கமழும் அப்பாடல்கள் பன்னிருதிருமுறைகளாக வகுக்கப்பட்டன (ஆறுமுகநாவலரவர்கள், 1986, ப: 4). அவ்வரிசையில் இவ்வாய்விற்கு உட்படுத்தப்பட்ட திருநாவுக்கரசரின் தேவரமும் அடங்கும்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் பாடிய திருமுறைகள் ஒவ்வொரு பெயர் பெற்று விளங்கின. “திருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் ‘திருக்கடைக்காப்பு’ என்னும் பெயராலும், சுந்தரர் பாடியவை ‘திருப்பாட்டு’ என்னும் பெயராலும் குறிக்கப் பெறும் மரபை உடையன. திருநாவுக்கரசரின் பாடல்களே ‘தேவாரம்’ என்னும் பெயரால் சூட்டப்படதக்கவையாகும்” (அறிவுடைநம்பி,ம.சா, 1992, ப:23). ஆரம்பக்காலக்கட்டத்தில், இப்பதிகங்கள் யாவும் தில்லைக் கோயிலில் ஓர் அறையில் பூட்டப்பட்டுக் கிடந்தன. முதலாம் இராசராசன்(கி.பி 985-1014) நம்பியாண்டார் நம்பி என்னும் அடியாரின் துணை கொண்டு தில்லையில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இருந்த பதிகங்களை மீட்டார். கறையானுக்கு இரையாகிப் போனவை நீங்கலாக எஞ்சியவற்றை நம்பியாண்டார் நம்பியைக் கொண்டே தொகுப்பித்தார் (நாகப்பன்.ஆ, 2008, ப: 391)

திருமுறைகள் பன்னிரெண்டாகப் பகுக்கப்பட்டுள்ளன என்பதனையும், திருஞானசம்பந்தர் பாடிய முதல் மூன்று திருமுறைகளாகவும் திருநாவுக்கரசார் பாடிய திருமுறை 4 முதல் 6-ஆம் திருமுறைகளாகவும், சுந்தரர் பாடிய திருமுறை 7-ஆம் திருமுறையாகவும் மாணிக்கவாசகர் பாடிய திருமுறை எட்டாம் திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், வேணட்டு அடிகள், திருவாலி அமுதனர், புருஷோத்தம நம்பி, சேதிராயர் என்ற ஒன்பது அடியார்கள் பாடிய பாடல்கள் 9-ஆம் திருமுறையில் இடம்பெற்றுள்ளன. திருமூலர் இயற்றிய திருமந்திரம் 10-ஆம் திருமுறையாகவும், சிவபிரான், காரைக்காலம்மையார் முதலிய பன்னிருவர் பாடிய பாக்களின் தொகுதி பதினொராம் திருமுறையாகவும் பகுக்கப்பட்டுள்ளன என்கிறார். சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகையைப் பின்பற்றியும், நம்பியாண்டர் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியைப் பின்பற்றியும் சேக்கிழார் பாடிய பெரிய புராணம் பன்னிரெண்டாம் திருமுறையாகப் பகுக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார் (இராசமாணிக்கனார். மா, 1955, ப:86)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பன்னிருதிருமுறைகள் சைவ ஆகம நெறிப்பட்ட வழிப்பாட்டு முறைகளையும் சைவ சிந்தாந்த நுண்பொருளையும் விளக்குவதோடு இறைவனைப் போற்றும் மந்திரங்களாகவும் விளங்குகின்றன. பன்னிருதிருமுறைகள் எழுந்த காலம் சைவ சமய வரலாற்றின் பொற்காலம் ஆகும் (நாகப்பன். ஆ, 2008, ப:18).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவ்வாய்விற்குப் பன்னிருதிருமுறையில் இடம்பெற்றுள்ள நான்காம் திருமுறையானது திருநாவுக்கரசரால் பாடப்பட்டது ஆகும். திருநாவுக்கரசரின் பாடல்கள் 'தேவாரம்' என்னும் பெயரால் குறிப்பிடப்படுகின்றது.. (அறிவுடைநம்பி,ம.சா, 1992, ப:23). திருநாவுக்கரசர் திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருவாமூரில் புகழனார் - மாதினியார் தம்பதியருக்குப் புதல்வனாக அவதரித்தார். இளமையிலேயே பெற்றோரை இழந்து தமக்கையான திலகவதியாரின் அரவணைப்பில் வளர்ந்தார். சமணர்களின் வார்த்தைகளில் மயங்கி திருநாவுக்கரசர் சமண மதம் தழுவினார். அச்சமயத்திலேயே பல அரிய நூல்களைக் கற்றுத் தேர்ந்து, "தருமசேனர்" என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார் (வெள்ளைவாரணன், க, 2011, ப:124-128).

திலகவதி அம்மையாரின் வேண்டுதலின் பலனாகவும் சிவபெருமானின் அருளாலும் சூலை நோய்க்கு ஆளாகி மீண்டும் சைவ சமயத்தைத் திருநாவுக்கரசர் தழுவினார். அதன் பின்னர், சிவபெருமான் வீற்றிருக்கும் தலங்களுக்குச் சென்று பதிகங்கள் பாடுவதும், சிவத்தலங்களை உழவாரப்படையைக் கொண்டு துப்புரவு செய்வதையே தம் தலையாய கடமையாகக் கொண்டு இறுதியில் இறைவனுடன் கலந்தார் (சுப்பிரமணியம் பிள்ளை. கா, 2010, ப: 190-203).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திருநாவுக்கரசர் பாடிய பாடல்களில் நமக்குக் கிடைக்கப்பெற்றவை 3066 மட்டுமே ஆகும் (நாகப்பன். ஆ, 2008, ப:19). இவை முறையே நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன. நான்காம் திருமுறையில் 1070 திருப்பாடல்களைக் கொண்ட 113 திருப்பதிகங்களும், ஐந்தாம் திருமுறையில் 1015 திருப்பாடல்களைக் கொண்ட 100 திருப்பதிகங்களும், ஆறாம் திருமுறையில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

981 திருப்பாடல்களைக் கொண்ட 99 திருப்பதிகங்களும் உள்ளன (அதிகைமணி, 1986, ப:5).

பன்னிருதிருமுறைகள் சைவ ஆகம நெறிப்பட்ட வழிப்பாட்டு முறைகளையும் சைவ சிந்தாந்த நுண்பொருளையும் விளக்குவதோடு இறைவனைப் போற்றும் மந்திரங்களாகவும் விளங்குகின்றன (நாகப்பன். ஆ, 2008, ப:96). அதுமட்டுமின்றி, திருநாவுக்கரசர் தாச மார்க்கத்தின் வழியாக இறைவனை அடைந்தார்.. தாச மார்க்கத்தின் வழி, திருநாவுக்கரசர் இறைவனை அடைந்துள்ளதால் அவரது பாடல்களில் சைவசிந்தாந்தத்தின் முப்பொருளின் ஒரு கூறான உயிர் கூறு உள்ளடக்கப்பட்டிருக்கும் என ஆய்வாளர் நம்புகிறார். தோத்திரம், சாத்திரம் என்னும் சொல்லாட்சிகள் திருநாவுக்கரசர் தேவாரத்தில் கையாளப் பெற்றுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனவே, இக்கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டு, சைவ சிந்தாந்தக் கூறுகளில் ஒன்றான உயிரின் இயல்பைத் திருநாவுக்கரசர் தேவாரத்தில் ஒப்பு நோக்கும் அடிப்படையில் “திருநாவுக்கரசர் தேவாரத்தில் உயிர்க் கொள்கை” என்ற ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 1.3 ஆய்வின் சிக்கல்

.“சைவத் திருமுறைகள் பன்னிரண்டினும் பரவி விரவிக்கிடக்கும் அரிய பெரிய தத்துவ உண்மைகளையே, சைவசித்தாந்த என்னும் பெயரால், மெய்கண்டார் முதலிய சைவசந்தானாசிரியர்கள் தொகுத்தருளினர். எள்ளினின்று எண்ணெய்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எடுப்பதுபோல, நமது சைவநாயன்மார்களின் வாழ்க்கையினின்றும், வாய்மொழிகளின்றுமே, சைவசித்தாந்தத் தத்துவக் கோட்பாடுகள், உருவாக்கப் பெற்று வரையறைச் செய்யப்பெற்றன (முருகவேள். ந.ரா, 1984, ப:193) இதன் வழி தொன்மை வாய்ந்த தமிழ்த் தோத்திரமான தேவாரமும், சாத்திரங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது எனலாம்.

திருநாவுக்கரசர் அடிமைநெறி என்னும் மார்க்கத்தின் வழி இறைவனை அடைந்தார். அதுமட்டுமின்றி, "திருநாவுக்கரசர் பெருமானின் வாழ்க்கை ஓர் இலக்கியம்; சைவசித்தாந்தம் அதனினின்று வடித்தெடுத்த சிறந்த இலக்கணம்" (முருகவேள், ந.ரா,1984,ப:193). மேலும், திருநாவுக்கரசர் தான் இறைவனுக்கு அடிமை என்றே குறிப்பிடுவார். இக்கூற்றுகள் அடிப்படையில், திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் உயிரைப் பற்றிய சிந்தனைகள் பல கோணங்களில் வெளிப்பட்டிருக்கலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சமயக் குரவர்கள் வாழ்ந்த காலம் கி.பி 7,8-ஆம் நூற்றாண்டு ஆகும். மெய்கண்ட சாத்திரங்கள் தோன்றிய காலம் கி.பி 13 ஆம் நூற்றாண்டு இந்த இடைப்பட்டக் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த சைவசமயக் கருத்துகள் மெய்கண்ட நூல்களில் தாக்கம் பெற்றிருந்தன. (குமரேசமூர்த்தி. சி, 2002, ப:38)

எனவே, இக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டு திருநாவுக்கரசர் தேவாரத்தில் உயிர்க்கொள்கை பற்றிய சிந்தனைச் சைவசித்தாந்தத்தோடு பொருந்தியும், எவ்வகையில் உட்படுத்தப்பட்டுள்ளன என்பதை ஆராய்வதே இந்த ஆய்வின் சிக்கலாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திருநாவுக்கரசரின் தேவாரப் பாடல்களுக்கும் சைவ சித்தாந்தத்தின் ஒரு கூறான உயிருக்கும் உள்ள தொடர்பினை ஆராயும் வகையில், சைவ தோத்திரமான தேவாரத்தையும் சைவ சாத்திர நூல்களில் ஒன்றான திருவருட்பயனையும் மையமாகக் கொண்டு "திருநாவுக்கரசர் தேவாரத்தில் உயிர்க்கொள்கை" என்ற ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 1.4 ஆய்வின் முக்கியத்துவம்

இந்த ஆய்வின் கண்டுபிடிப்புப் பல சாராரும் பயன்பெறும் வகையில் அமையும். இவ்வாய்வின் வழி, திருநாவுக்கரசர் தேவாரத்தில் இடம்பெற்றுள்ள உயிர்க்கொள்கைகள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், திருநாவுக்கரசர் தேவாரத்தில் சைவசிந்தாந்த கோட்பாடான உயிரின் கொள்கையை ஆராய்வதன் மூலம் தோத்திர நூல்களுக்கும் சைவ சாத்திர நூல்களுக்கும் உள்ள தொடர்பை அறிய இவ்வாய்வு வழிவகுத்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சித்தாந்த சாத்திர சிந்தனைகளைத் சைவத்தோத்திரங்களுடன் ஒப்பு நோக்கி ஆராய்ந்தால் சாத்திர உண்மைகள் மேலும் விளக்கம் பெறும். இவ்விளக்கம் மக்கள் சித்தாந்தக் கொள்கைகளை எளிதில் அறியும் வாய்ப்பாக அமையும். அதுமட்டுமின்றி, இவ்வாய்வு வழி உயிரின் இயல்புகளை விரிவாக அறிய வழி செய்யும். மேலும், உயிர்கள் இறைவனை அடையும் சூத்திரத்தையும் அறிய இவ்வாய்வு வழிவகுக்கும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தேவாரம், சாத்திர நூல்கள் அடிப்படையில் ஆய்வுகள் பிற நாடுகளில் செய்திருந்தாலும் மலேசியாவில் முதல் முறையாகச் செய்யப்படும் இந்த ஆய்வு இலக்கிய ஆய்வுத் துறைக்கு ஒரு முக்கிய பங்களிப்பாகவும் முன்னோடியாகவும் அமையும். மேலும், மக்கள் மத்தியில் தேவாரம், சாத்திர நூல்கள் பற்றின ஆழமான சிந்தனையையும் தூண்டச் செய்யவும் இவ்வாய்வு வழிவகுக்கும்.

## 1.5 ஆய்வு நோக்கம்

இவ்வாய்வு கீழ்க்காணும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. திருநாவுக்கரசர் தேவாரத்தில் உயிரின் கொள்கைகளைக் கண்டறிதல்.
2. திருநாவுக்கரசர் தேவாரத்தில் உயிரின் கொள்கைகளை வகைப்படுத்துதல்.
3. திருநாவுக்கரசர் தேவாரத்திற்கும் உயிர்க்கொள்கைக்கும் இடையே உள்ள தொடர்பை ஆராய்தல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.6 ஆய்வு வினா

இவ்வாய்வின் இறுதியில் கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் காணப்பட்டன.

1. திருநாவுக்கரசர் தேவாரத்தில் உள்ள உயிரின் கொள்கைகள் யாவை?
2. திருநாவுக்கரசர் தேவாரத்தில் உள்ள உயிரின் கொள்கைகளின் வகைகள் யாவை?
3. திருநாவுக்கரசர் தேவாரத்திற்கும் உயிர்க்கொள்கைக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன?

## 1.7 ஆய்வு எல்லை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவ்வாய்விற்குத் திருநாவுக்கரசர் பாடிய 312 பதிகங்களில் ஆய்வு எல்லையையும் கால அவகாசத்தையும் கருதி திருநாவுக்கரசரின் நான்காம் திருமுறையில் 42 பதிகங்கள் மட்டுமே ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. இவ்வாய்விற்கு 2015 ஆம் ஆண்டில் வீ.சிவஞானம் அவர்களால் இயற்றப்பட்ட திருநாவுக்கரசர் தேவாரம் எனும் முதல் பகுதி நூலில் தொகுக்கப்பட்ட நாற்பத்து இரண்டு பதிகங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. மேலும் இவ்வாய்விற்கு, திருவருட்பயனின் உயிரவை நிலையின் கீழ் அமைந்திருக்கும் கூறுகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.8 ஆய்வு ஆதாரங்கள்

### 1.8.1 முதன்மை ஆதாரம்

இவ்வாய்வின் முதன்மை ஆதாரமாகத் திருநாவுக்கரசரால் பாடப்பட்ட நான்காம் திருமுறையில் அமைந்துள்ள 42 பதிகங்களும் உமாபதிசிவனார் அருளிய திருவருட்பயனின் உயிர்க்கோட்பாடும் விளங்கின்றது..

### 1.8.2 துணைமை ஆதாரம்

திருநாவுக்கரசர் தேவாரத்தையும் திருவருட்பயனையும் மையமாகக் கொண்ட ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வேடுகள், போன்றவை இவ்வாய்வை மேற்கொள்ள துணைமை ஆதாரங்களாகத் திகழ்ந்தன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.9 முக்கியக் கலைச்சொற்கள் விளக்கம்

### 1.9.1 திருநாவுக்கரசர் தேவாரம்

திருநாவுக்கரசர் சிவனடியார்களான 63 நாயன்மார்களில் ஒருவர் ஆவார். இவர், 'அப்பர்', 'மருள்நீக்கியார்', 'வாகீசர்' என்ற திருப்பெயர்களால் அழைப்படுகிறார். திருநாவுக்கரசர் பாடிய பாடல்கள் தேவாரம் எனச் சுட்டப்படுகின்றது. தேவாரம் என்ற சொல்லை தே+ஆரம் என்று பிரிக்கப்படலாம். 'ஆரம்' என்றால் மாலை,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

'தேவாரம்' என்றால் தெய்வத்திற்குச் சூட்டப்படும் மாலை (கமலம். அ, 2012 ,ப:20). திருநாவுக்கரசர் தேவாரம் 4,5,6 எனப் பிரிக்கப்பட்டுள்ளன.

திருநாவுக்கரசர், 'கூற்றாயினவாறு' என்று தொடங்கும் பாடல் முதல் 'ஒருமானைத் தரிக்கும்' என்ற பாடல் வரை 49000 பாடல்கள் பாடியிருப்பதாக நம்பியாண்டார் நம்பியின் திருமுறைகண்ட புராணத்தில் இடம் பெற்றுள்ள கீழ்க்காணும் பாடல் பகுதி உணர்த்துகின்றது.

> "குருநாமப் பரஞ்சுடரைப் பரவிச் சூலைகொடுங்
> கூற்றாயின என்ன எடுத்துக் கோதில்
> ஒருமானைத் தரிக்கும் ஓரவரையுங் காறும்
> நாற்பத்தொன் பதினாயிர மதாக"
>
> (15)

ஆனால், இன்று நமக்குக் கிடைக்கப்பெறுபவை 3066 தேவாரப்பாடல்களே ஆகும். இவை 312 பதிகங்களை உள்ளடக்கியன ஆகும். இப்பாடல்கள் பாவகையை அடிப்படையாகக் கொண்டது. திருநாவுக்கரசரின் நான்காம் திருமுறையில் இடம்பெற்றுள்ள பதிகங்களைத் 'திருநேரிசை' என்றும் குறிப்பிடுவர். இத்திருமுறையில் இடம்பெற்றுள்ள பதிகங்கள் 113 ஆகும். இப்பதிகங்களில் 1070 பாடல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன (சிவஞானம்,வீ, 2015, ப: 3).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அதனையடுத்து, ஐந்தாம் திருமுறையில் இடம் பெற்றுள்ள பதிகங்களைத் 'திருக்குறுந்தொகை' எனக் குறிப்பிடப்படுகின்றது. இத்திருமுறையில் 100 பதிகங்கள் இடம்பெற்றுள்ளன. இப்பதிகங்களில் 1015 பாடல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து, ஆறாம் திருமுறை 'திருத்தாண்டகம்' என்றும் குறிப்பிடப்படுகின்றது. இத்திருமுறையில் 99 பதிகங்களும் 981 பாடல்களும் இடம் பெற்றுள்ளன ( மேலது, ப:3)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.2 உயிர்க்கொள்கை

சைவசித்தாந்தத்தில் முடிந்த முடிபாகக் கொள்ளப்படும் பொருள் மூன்று, அவை பதி, பசு, பாசம் (ஞானப்பூங்கோதை.மோ, 2002, ப:3). 'பசு' என்னும் சொல் உயிரைக் குறிக்கின்றது. தன் வேர்ச்சொல் 'பச்' என்பது ஆகும். 'இது கட்டப்பட்டது' என்னும் பொருளைத் தரும். 'பசு' அநாதியே ஆணவ மலத்தால் கட்டப்பட்டுக் கிடந்ததால் இப்பெயர் பெற்றது (நாகப்பன்.ஆ, 2008, ப:168). சைவ சித்தாந்திகள் உயிர்களைப் பசுக்கள் ஆன்மாக்கள், சீவன்கள், ஆருயிர்கள், ஜீவாத்மாக்கள், அணுக்கள் எனக் குறிப்பிடுகின்றனர் (சங்கரப்பிள்ளை.பொ, 1985, ப:40).

ஆன்மா இறைவனைப் போல் பூரண வியாபகம் உடையதன்று. அதிசூக்ம சித்தும் அன்று. சார்ந்த பொருளினிடத்து அப்பொருளின் அளவாக வியாபித்து

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நின்று அறியும் தன்மையது. இச்சா ஞானக் கிரியைகள் உடையதாயினும் அந்த இச்சா கிரியைகள் அனாதியே ஆணவ மலத்தைப் பற்றியதனால் அம்மலத்தால் மறைப்புண்டு ஆன்மா 'தூலசித்தாய்' நிற்கும். இவ்வாறு கட்டுப்பட்ட நிலையிலேயே ஆன்மாவைச் சைவ சித்தாந்தம் 'பசு' என்று குறிப்பிடுகிறது (கோகுல். இரா, 2009, ப:9)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.10 முடிவுரை

இந்த இயலில் இவ்வாய்வைப் பற்றிய விளக்கம் கூறப்பட்டது. ஆய்வின் பின்னணி, ஆய்வின் சிக்கல், ஆய்வின் முக்கியத்துவம், ஆய்வு நோக்கம், ஆய்வு வினாக்கள், ஆய்வு எல்லை, ஆய்வு ஆதாரங்கள், ஆய்வுத் தலைப்பில் காணப்படும் முக்கியக்கலைச்சொற்கள் போன்றவையின் விளக்கங்கள் யாவும் இவ்வியலின் ஓர் அறிமுகமாக அமைகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi